**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**2026 - ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25- ம் நாள் புதன்கிழமை**

**திருமதி.N.மீனாட்சி, B.A.B.L., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதிமொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

பெயர் : அன்னத்தாய் அசல் வழக்கு எண்:32/2025
க/ பெயர் : மணி வாதி தரப்பு சாட்சி எண். 01
வயது : 57/2026
கிராமம் : பெரியார் நகர், உருளிக்கல் எஸ்டேட்
வட்டம் : வால்பாறை
சமயம் :
தொழில் : வீட்டுக்குடித்தனம்

**முதல் விசாரணை**

1. எனது தரப்பில் ஆணையுறுதிப் பத்திரமும், கூடுதல் ஆணையுறுதிப்பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

| ஆ. எண். | ஆவணம் | ஆவண தன்மை | ஆவண குறியீடு |
|---|---|---|---|
| 1. | அன்னத்தாய் ஆதார் அட்டை எண்.227933450066 | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. | வா.சா.ஆ.1 |
| 2. | அன்னத்தாய் பெயரிலுள்ள வருமான வரி அட்டை எண்.EAJPA 3622P | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. | வா.சா.ஆ.2 |
| 3. | அன்னத்தாய் குடும்ப அட்டை எண். PHH 333847460906 | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. | வா.சா.ஆ.3 |
| 4. | மேரி வாக்காளர் அடையாள அட்டை எண்.ZWY 2121234 | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. | வா.சா.ஆ.4 |
| 5. | 26.12.2012-ம் தேதி வழங்கிய மேரி என்ற பெயரிலுள்ள அஞ்சல சேமிப்பு புத்தகம் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. | வா.சா.ஆ.5 |
| 6. | மேரி என்ற பெயரில் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் வழங்கிய 2003 - 2004-ம் வருடங்களுக்கான ரசீது | அசல். | வா.சா.ஆ.6 |
| 7. | மேரி என்ற பெயரில் எனக்கு வழங்கிய 2008 ஜனவரி மாதத்திற்குரிய சம்பளபிரதி | அசல். | வா.சா.ஆ.7 |
| 8. | 29.10.2024-ம் தேதியிட்டு வால்பாறை வட்டாட்சியருக்கு அனுப்பிய விண்ணப்பம் | நகல். | வா.சா.ஆ.8 |
| 9. | வால்பாறை வட்டாட்சியர் நான் அனுப்பிய விண்ணப்பத்தை 14.11.2024 -ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் | வா.சா.ஆ.9 |
| 10. | 09.12.2024-ம் தேதியிட்டு 11.12.2024-ம் தேதி கோவை மாவட்ட ஆட்சியர் மற்றும் | அலுவலக நகல் | வா.சா.ஆ.10 |

| | | | |
|---|---|---|---|
| | வால்பாறை வட்டாட்சியருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு ரசீதுகளுடன் | | |
| 11. | சட்ட அறிவிப்பை கோவை மாவட்ட ஆட்சியர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல ஒப்புதல் அட்டை | அசல் | வா.சா.ஆ.11 |
| 12. | சட்ட அறிவிப்பை வால்பாறை வட்டாட்சியர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல ஒப்புதல் அட்டை | அசல் | வா.சா.ஆ.12 |

பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

1. எனது கணவர் பெயர் என்ன என்றால் மணி ஆகும். எனது அப்பா பெயர் என்ன என்றால் முத்தையா ஆகும். எனது குடும்ப அட்டையில் குருசாமி என்று பெயர் உள்ளது அது யார் என்றால் எனது முன்னால் கணவர் மணி இறந்த பிறகு குருசாமி என்பவரை நான் திருமணம் செய்து கொண்டேன். குருசாமி என்பது எனது இரண்டாவது கணவர் பெயர் ஆகும். எனது கணவர் மணி எப்போது இறந்தார் என்றால் 10 வருடங்கள் ஆகிவிட்டது. எனக்கு குழந்தைகள் இருக்கிறார்களா என்றால் எனக்கு செல்வி என்ற மகள் இருந்து அவர் 12-ம் வகுப்பு படிக்கும் போது இறந்துவிட்டார். வா.சா.ஆ.6 வருங்கால வைப்பு நிதி ரசீது எனது தந்தை பெயர் மணி என உள்ளது என்றால் அது எனது தந்தை பெயர் அல்ல. அது எனது கணவர் பெயர் ஆகும். ஆதார் அட்டை 2013-ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. அதனை தற்போது 10 வருடங்கள் கழித்து புதுப்பித்துள்ளேனா என்றால் இல்லை. நான் வட்டாட்சியர் மற்றும் ஆட்சியர் அவர்களுக்கு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு CPC பிரிவு 80-ன் படி அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன். வழக்கில் கணவர் மணி இறந்த விவரத்தையும், மகள் செல்வி இறந்த விவரத்தையும் மற்றும் வா.சா.ஆ.6-ல் தந்தை பெயர் மணி என்றும் குறிப்பிட்டு காரணங்களுக்காக தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.